திரு. எஸ். வடிவேல் : காவல் துறைக்குப் பெண்களை எடுத்துக் கொள்ளும்போது, குறிப்பாக நல்ல வலுவுள்ள, நாட்டைப் பாது காக்கத் தைரியமுள்ள அரிசனப் பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர் களுக்கு முதல் ப்ரிஃபெரன்ஸ் கொடுக்க நம்முடைய அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது குறைந்த எண்ணிக்கையில்தான் பெண் காவல் படையினர் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். இந்த எண்ணிக்கை பெருகுகிற காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அந்தக் கருத்தும் கவனத்திலே கொள்ளப்படும். இப்பொழுது அரிசனப் பெண்களை எடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. யார் யார் இந்தத் தேர்வுக்கு வந் தார்களோ அவர்களிலே இப்பொழுது பலரும் தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவேளை அரிசனப் பெண்களும் இருந்திடக்கூடும்.

சில்லறை நாணயத் தட்டுப்பாடு

* 570 வினா—திரு. என் கிட்டப்பா :

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கடந்த ஆறு மாதங்களாகத் தமிழ்நாட்டில் நிலவும் சில்லறை நாணயத் தட்டுப்பாடு குறித்து, மத்திய அரசுக்கு, மாநில அரசு தெரிவித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்து மத்திய அரசு அளித்துள்ள காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவர அறிக்கை யொன்று @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சில்லறைத் தட்டுப் பாட்டைச் சமாளிக்கும்பொருட்டு பெரிய வியாபாரிகள் டோக்கன் களைப் பயன்படுத்துகிறார்கள். அதுபோன்ற டோக்கன்களை மாநில அரசு—அரசு முத்திரையுடன்—தயாரித்து வியாபாரிகளுக்கு வழங்குவது குறித்து அரசு ஆலோசிக்குமா ? இதற்கும் மத்திய அரசின் அனுமதி தேவையா ?

@ 601-604 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1973 டிசம்பர் 3]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில அரசு இது போன்ற டோக்கன்களைத் தயாரிப்பதோ அல்லது மாநில அரசே இதுபோன்ற முத்திரையோடு நாணயங்கள் தயாரிப்பதோ இயலாது. அதற்கு அரசியல் சட்டம் இடம் தராது.

திரு. என். கே. பழனிசாமி: இப்பொழுது கொடுத்திருக்கும் ஸ்டேட்மென்டில் சில்லறைப் பற்றுக்குறைக்குக் காரணம், அதை உருக்கி விற்பதாகச் சொல்லப்படுகிறது. அப்படி உருக்கப்பட்டவர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறுர்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உருக்கப்பட்டவர்களைப் பிடிக்க முடியாது. (சிரிப்பு) உருக்கியவர்களை வேண்டுமானால் பிடிக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 1971-ஆம் வருஷத்தில் இம்மாதிரி சேமித்து வைக்கக்கூடியவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கலாம் என்று சட்டம் போட்டார்களே, அதன்படி யார் பேரிலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? இப்பொழுது சென்னையில் இருக்கும் ரிசர்வ் வங்கி பல ஸ்டோர்களுக்கெல்லாம் சில்லறை நாணயங்களை அனுப்புவதாகச் சொல்லுகிறுர்கள். தமிழ்நாட்டில் எந்தெந்த இடங்களில் அந்த சில்லறை நாணயங்களை அனுப்புகிறுர்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மத்திய அரசிலிருந்து நமக்குக் கிடைத்துள்ள தகவலின்படி, பம்பாயிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கி சில்லறை நாணய இருப்பு நிலைமை சரியாக இருப்பதாகவும், தமிழ்நாட்டுக்குப் போதிய அளவு அனுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறது என்கிற வகையிலும்தான் மத்திய அரசிடமிருந்து நமக்குத் தகவல் வந்துள்ளது. எங்கெங்கே அனுப்பப்படுகின்றன என்ற விவரங்கள் இல்லை. சில்லறை நாணயங்களை உருக்கியவர்கள், பதுக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து இப்பொழுது விவரம் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இப்பொழுதெல்லாம் இந்தச் சில்லறை நாணயங்களுக்கு ஏதாவது 2 சதவிகிதம் அல்லது 3 சதவிகிதம் ஈவு கொடுத்தால்தான் சில்லறை கிடைக்கிறது. தீபாவளி,

[1973 டிசம்பர் 3

பொங்கல் போன்ற சமயங்களில் பெரிய வியாபாரிகள் சில்லறை கிடைக்காமல் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே மாநில அரசு இதில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க சாத்தியமுண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்படிப்பட்ட சில்லறை விஷயங்களில் எல்லாம் மாநில அரசு நடவடிக்கை எடுக்க இயலாது.

திரு. என். கே. பழனிசாமி: சென்னை நகர்புறத்தில் இந்தச் சில்லறை தட்டுப்பாடு இல்லாவிட்டாலும் பல மாவட்டங்களில் பஸ் டிரான்ஸ்போர்ட் போன்றவைகளில் சில்லறை கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே சர்க்கார் நடத்தக் கூடிய பஸ் டிரான்ஸ் போர்ட்டிலாவது சில்லறை கொடுக்க சர்க்கார் உத்தரவிடுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சில்லறை வழங்கவேண்டும் என்ற அளவில் சர்க்கார் உத்தரவிடமுடியாது. இப்படி பதுக்கி வைக்கிற காரியங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கும் அவர்களை எச்சரிப்பதற்கும் வேண்டுமானால் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி: இந்த சில்லறைகள் மட்டுமல்லாமல் சமீபத்தில் நூறு ரூபாய் நோட்டு செல்லாது என்ற புரளி கிளப்பப் பட்டு ஐந்நூறு ரூபாய், பத்து ரூபாய் நோட்டுகள் கூட நாட்டில் புழங்க முடியாத ஒரு சூழ்நிலையும் ஏற்பட்டு அதனால் பம்பாய் போன்ற மாநிலங்களில் எல்லாம் ஒரே நாளில் ஐம்பது லட்சம், அறுபது லட்சம் ரூபாய் என்ற அளவில் சில்லறை மாற்ற பாங்குகளில் கூட்டம் கூடியதாக செய்திகள் வந்தன. அந்தப் பிரச்னை தமிழ்நாட்டிலும் இரண்டு, மூன்று தினங்கள் இருந்தன. அதுபற்றி தமிழக அரசுக்கு தகவல் ஏதாவது கிடைத்திருக்கிறதா? நூறு ரூபாய் நோட்டு செல்லாது என்று மத்திய அரசு அறிவிக்கக் கூடிய வாய்ப்பு ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி, நூறு ரூபாய் நோட்டு செல்லாது என்ற நிலை வரப்போகிறது என்ற வதந்தி பரவிய காரணத்தால் சில்லறை ஆங்காங்கு முடக்கப்பட்டன என்று சொல்லப்பட்ட தகவல் ஓரளவு உண்மைதான். ஆனால் நூறு ரூபாய் நோட்டு செல்லாமல் போகும் என்ற தகவல் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை.